01.07.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## ஐந்து ஏக்கரில் மல்லிகை... மாதம் ரூ.2 லட்சம் வருவாய்



ஐந்து ஏக்கர் நிலத்தில் மல்லிகைப்பூ சாகுபடி செய்து மாதம் ரூ.2 லட்சம் வருமானம் கிடைக்குமா? என கேட்கலாம். மதுரை மாவட்டம் மஞ்சம்பட்டியை சேர்ந்த பட்டதாரி விவசாயி ரெங்கநாதன் தனது நிலத்தில் மல்லிகை சாகுபடி செய்து பணியாளர்கள் 150 பேருக்கு தினமும் சம்பளம் வழங்குவதோடு மாதம் ரூ.2 லட்சம் வருவாய் ஈட்டுகிறார். தேசிய அளவில் சிறந்த விவசாயிக்கான விருது பெற்றுள்ளார்.மல்லிகை விவசாயத்தை மணக்கச் செய்யும் ரெங்கநாதன் கூறுகையில், ""சொட்டுநீர் பாசனம் மூலம் ஐந்து ஏக்கரில் மல்லிகை விவசாயம் செய்கிறேன். செடியை நடவு செய்து ஆறாவது மாதத்தில் இருந்து பூக்கள்

பறிக்கலாம். முறையாக பராமரித்தால் 15 ஆண்டுகள் கூட மல்லிகை கிடைக்கும். உதாரணத்துக்கு எனது மகன் அழகர்சாமி பிறந்த போது, அவரது பெயரில் மல்லிகை செடி ஒன்றை நட்டேன். அவருக்கு இப்போது வயது 15. ஐந்து ஏக்கரில் நடவு செய்த செடியில் இருந்து அதிகளவு பூக்கள் பூக்கிறது. இயற்கை அடிஉரம் மட்டுமே பயன்படுத்துகிறேன். நாள் ஒன்றுக்கு 150 முதல் 200 கிலோ வரை பூக்கள் கிடைக்கும். சராசரியாக கிலோ ரூ.200க்கும், முகூர்த்த நேரங்களில் கிலோ ரூ.1500க்கும் அதிகமாக விலை கிடைக்கும். மாட்டுத்தாவணி பூ மார்க்கெட் விலைக்கே வியாபாரிகள் பூக்களை எடுத்து கொள்கின்றனர். மஞ்சம்பட்டி குண்டு மல்லிகைக்கு மணம் அதிகம் என்பதால் ஏற்றுமதியும் செய்கின்றனர். வயல் பராமரிப்பு, களை எடுப்பு, பூக்கள் பறிப்பு, நீர் மேலாண்மை, உர மேலாண்மை என 150 பேருக்கு வேலை கொடுக்கிறேன். மாதம் வருவாய் சராசரியாக ரூ.2 லட்சத்துக்கு குறையாது. மல்லிகை விவசாயத்தில் முறையான பராமரிப்பு, உழைப்பு, இயற்கை அடிஉரம், பூச்சிக்கொல்லி முதலியவற்றை முறையாக கடைப்பிடித்தால் மல்லிகை விவசாயம் மணக்கும். எனது தொழில்நுட்ப ரகசியத்தை பிறருக்கும் கற்றுத்தருகிறேன்," என்றார்.தொடர்புக்கு: 90957 28851

**வனிலா**



கர்நாடகத்தில் சிமோகா மாவட்டத்தில் சாகர் வட்டத்தில் உள்ள பாக்குத் தோட்டங்களில் வனிலாவை ஊடுபயிராகச் செய்துள்ளனர். வனிலாவுக்கு என்று தனியே இங்குள்ள விவசாயிகள் எந்த செலவும் செய்வதில்லை. அதற்கென உரங்களை கூட இடுவதில்லை. வனிலாவிற்கு அவசியம் செய்தாக வேண்டிய மகரந்தச் சேர்க்கையை அந்தந்த விவசாயிகளின் குடும்பத்தினரே செய்து கொள்வதால் அதிகப்படியான செலவு எதுவும் இல்லை.உழவியல் முறைகள் : தென்னை ஓலை, பாக்கு ஓலை மற்றும் காய்ந்த மரக் கொப்புகளைப் பயன்படுத்தி நடவு செய்திட்ட கொடிகளுக்குத் தனித்தனியே பந்தல் போன்று ஏற்படுத்தி, சூரிய ஒளியின் நேரடித் தாக்கத்திலிருந்து பாதுகாக்க வேண்டும். சீதோஷ்ண நிலைமையைப் பொறுத்து கொடி களுக்குத் தேவைப்பட்டால், தண்ணீர் ஊற்றிவர வேண்டும். கொடிகளின் தூர்ப் பாகங்களில் போதுமான அளவிலே அங்ககக் கழிவுகளைப் பயன்படுத்தி மூடாக்கு இட வேண்டும். வனிலாக் கொடிகளைத் தாங்குவதற்கு மரங்களின் மீது கட்டி ஏற்றி வருவதைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.குறைவான உயரம் உள்ள இடங்களில் பூக்கள் மலரத் தொடங்கியிருந்தால், அன்றே காலை 6 மணி முதல் மதியம் 1 மணி வரை கை கொண்டு பூக்களில் மகரந்தச் சேர்க்கையை மேற்கொள்ள வேண்டும். வனிலா பீன்ஸ்களின் அடி நுனி மஞ்சளாக மாறும்பொழுது அறுவடையைச் செய்ய வேண்டும். இதனால் வனிலா பீன்ஸ்களின் தரத்தை மேம்படுத்த இயலும். அறுவடை செய்தவுடன் பச்சை பீன்ஸ்களாக விற்பனை செய்யலாம்.காசர்கோடு பகுதியில் வனிலாவை வைத்து "வனிலா சுகர்' என்ற புதிய பொருளைத் தயாரித்து வருகின்றனர். மற்றும் வனிலாவை வைத்தே ஐஸ்கிரீம் பாதாம் பால் என்ற மணம் கமழும் பொருட்களை வழங்கி வருகின்றனர். வனிலா என்பது இயற்கை அளித்துள்ள வரப்பிரசாதமாகும். இத்தகைய இயற்கையான வனிலாவை உற்பத்தி செய்து நீடித்த முறையிலே வருமானம் பெறுவதற்கு முயற்சிக்கலாம். (தகவல் : ஸ்பைசஸ் இந்தியா இதழ், கொச்சி).வாசனை கருதி சாக்லேட் தயாரிப்பிலும் வனிலா இணைகின்றது. வனிலாவைக் கொண்டு ஊற வைத்த மதுபானங்கள்

புத்துணர்வு அளிக்கின்றனவாம். மருத்துவத் துறையில் காய்ச்சல், வலிப்பு முதலான பிணிகளைக் குணமாக்கவும் இது உபயோக மாகின்றதாம்.

**சின்ன சின்ன செய்திகள்**



ஸ்பைசஸ் வழியில் தீரும் மூட்டுவலி : மலைப்பூண்டு பருப்புகளின் தோலை உரித்து வடைச்சட்டியில் போட்டு நல்லெண்ணெய் ஊற்றி, மிளகு, சீரகம், இஞ்சி, வெங்காயம், தக்காளி, உப்பு ஆகியவற்றைச் சேர்த்து நன்கு வதக்கி காலையில் வெறும் வயிற்றில் உணவில் கலந்து சாப்பிடலாம். பூண்டு மசால் பொடியில் நல்லெண்ணெயை கலந்து இட்லிக்கு சேர்த்து சாப்பிடலாம். கால்படி பூண்டை பாலில் சேர்த்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றைச் சேர்த்து சுண்ட வைத்து, முதலில் பூண்டு கலவையைச் சாப்பிட்டு விட்டு அதில் உள்ள பாலை அருந்தலாம். தினந்தோறும் இவ்வாறு செய்தால் மூட்டுவாத நோய் நிச்சயமாக குணமாகிறது. தகவல் : விருதை நாகரத்தினம், விருதுநகர், தமிழ்நாடு.எலுமிச்சை : தமிழ்நாட்டில் ஆரஞ்சு, எலுமிச்சை பயிரிடும் அனைத்து பகுதிகளிலும் காணப்படும். எலுமிச்சை வேர் நூற்புழுவால் விளைச்சல் சுமார் 50 சதம் வரை குறைகிறது. மரங்களின் வளர்ச்சி குறையும். இலைகள் வெளிறிய மஞ்சள் நிறமாகியும் உள்நோக்கிச் சுருண்டும் இலைகளின் எண்ணிக்கை குறைந்தும், பழங்களின் எண்ணிக்கை குறைந்தும், சிறுத்தும் காணப்படுகின்றன. நூற்புழு தாக்கிய மரத்தின் கிளைகள் உதிர்ந்து கிளைகள் மேலிருந்து கீழ் நோக்கி சாய்ந்து காணப்படும். இந்த நூற்புழுக்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ், ப்ளூரசன்ஸ் எனும் பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பாக்டீரியா கலவையை மாதத்திற்கு 20 கிராம் வீதம் நான்கு மாதத்திற்கு ஒருமுறை மரத்தைச் சுற்றி 15 செ.மீ. ஆழத்தில் மரத்தில் இருந்து 50 செ.மீ. தூரத்தில் மணலுடன் கலந்து இட வேண்டும்.உயிரியல்முறைக்

கட்டுப்பாட்டை வணிக மயமாக்குதல் : தற்போது இந்தியாவில் 128 உயிரியல் பூச்சி நோய் கட்டுப்படுத்தும் காரணிகளை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 80 தனியார் நிறுவனங்கள் 27 வகை ஒட்டுண்ணிகளை உற்பத்தி செய்கின்றன. மற்றவை ஆஸ்திரேலிய பொறிவண்டு, கிரைசோபா இரைவிழுங்கி, பேசில்லஸ் பாக்டீரியா, உறிர் சூடைல்லா, வெர்டிசிலிலியம், பவேரியா, மெட்டாரைசியம், வைரஸ் நச்சுயிரி, பயிர்களில் நோய் எதிர்ப்பு திறனை உருவாக்கும் சூடோமோனாஸ், டிரைக்கோடெர்மா பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் நூற்புழுக்களை உற்பத்தி செய்கின்றன.உயிரியல் முறை பயிர்பாதுகாப்பு தற்கால வேளாண் உற்பத்தியில் முக்கிய கட்டத்தை அடைந்துள்ளது. ஆராய்ச்சியாளர் மதிப்பீட்டின்படி இனிவரும் காலங்களில் செயல்திறன் மிக்க புதிய வகை உயிரியல் பூச்சி நோய்க் கொல்லிகளைக் கண்டறிந்து உற்பத்தி செய்ய பெரிய அளவில் முன்வர வேண்டும்.தென்னையில் ஊடுபயிரின் அவசியம் : அதிக இடைவெளியுள்ள தென்னந்தோப்புகளில் ஊடு பயிரிட்டு பல பயிரிலும் வருமானம் பார்க்கலாம். நெருக்கமாக நடவு செய்திருக்கும் தோப்புகளில் ஊடுபயிரிடுவது முக்கிய பயிரான தென்னையில் மகசூலைக் குறைத்து விடும் அபாயமும் இருக்கிறது. தென்னைக்கு ஊடுபயிர் என்றால் ஓராண்டு, ஈராண்டு பயிர்களை ஊடுபயிர் என்றும், பல்லாண்டு பயிர்களை கலப்புப் பயிர்கள் என்றும் அழைக்கின்றோம். இவற்றுடன் ஆடு, மாடு, கோழி, மீன், முயல் போன்ற கால்நடைகளையும் வளர்த்து ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பையும், வருமானத்தையும் பெறுவது கலப்பு பண்ணையம் ஆகும். சின்ன விவசாயிகளுக்கு பொருத்தமானது கலப்பு பண்ணையம். நடுத்தர விவசாயிகளுக்கு ஊடு பயிர்களும், கலப்பு பண்ணையமும் ஏற்றவை. பெரிய விவசாயிகளுக்கு கலப்பு பயிர்கள் ஏற்றவை.

**ரூ. 35 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்**

ராசிபுரம்:நாமகிரிப்பேட்டை, வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 790 மூட்டைகள், 35 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

ராசிபுரம் அடுத்த, நாமகிரிப்பேட்டை, வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரம் தோறும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடக்கிறது. இங்கு, தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், தங்கள் விளை நிலத்தில், சாகுபடி செய்த மஞ்சளை அறுவடை செய்து ஏலத்துக்கு கொண்டு வருகின்றனர்.

அதன்படி, தலா, 65 கிலோ கொண்ட, 790 மூட்டைகள் ஏலத்தில் இடம் பெற்றது. அதில், விரலி ரகம், மூட்டைக்கு அதிக பட்சம், 8,319, குறைந்த பட்சம், 6,422 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம், மூட்டைக்கு அதிக பட்சம், 7,301, குறைந்த பட்சம், 6,009 ரூபாய்க்கு, விற்பனை செய்யப்பட்டது.

அதேபோல், பனங்காலி ரகம், மூட்டைக்கு, 13 ஆயிரத்து, 700க்கும், குறைந்த பட்சம், 7,089 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, 790 மூட்டை மஞ்சள், 35 லட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டது.

**தக்காளிக்கு கட்டுப்படியான விலை: மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி: தக்காளிக்கு, கட்டுபடியான விலை கிடைத்து வருவதால், தர்மபுரி மாவட்ட தக்காளி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட, தர்மபுரி மாவட்டத்தில், தக்காளி சாகுபடி முக்கிய பங்கு வகிக்கிறது. தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம்,

பாலக்கோடு, மாரண்டஹள்ளி, வெள்ளிச்சந்தை, காரிமங்கலம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி உட்பட, மாவட்டம் முழுவதும் தக்காளி, 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.கடந்த, இரு மாதங்களுக்கு முன், தக்காளி விலையில், போதிய முன்னேற்றம் இல்லாததால், தக்காளி விசாயிகள் கவலை அடைந்தனர். இந்நிலையில், கோடை மழையை தொடர்ந்து, மாவட்டத்தில், தக்காளி உற்பத்தி சற்று அதிகரித்த போதும், தக்காளி தேவையும், அதிகரித்துள்ளது.இதனால், ஒரு கிலோ, தக்காளி, 18 ரூபாய் முதல், 20 ரூபாய் வரை, தக்காளி மார்க்கெட்டுகளிலும், கடைகளில், அதிகபட்சமாக, 26 ரூபாய் வரை, விற்பனையாகிறது. தக்காளிக்கு, கடந்த, இரண்டு மாதங்களாக, கட்டுபடியான விலை கிடைத்து வருவதால், அதை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.இதுகுறித்து, பாலக்கோட்டை சேர்ந்த விவசாயி, குமார் கூறியதாவது:தக்காளி விலை உயர்ந்தாலும், குறைந்தாலும், தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த பெரும்பாலான தக்காளி விவசாயிகள், தக்காளியை தொடர்ந்து சாகுபடி செய்து வருகின்றனர். இந்தாண்டு, மே மாதத்துக்கு முன், தக்காளி விலை, பத்து ரூபாய்க்கும் குறைவாக இருந்தது.குறிப்பாக, தென்மாவட்டங்களான மதுரை, திண்டுக்கல், தேனி உள்ளிட்ட பகுதிகளில், கடந்த சில மாதங்களாக, தக்காளி சாகுபடி குறைந்துள்ளது. இதனால், தக்காளி தேவை அதிகரித்து, கடந்த, மே மாதம் முதல், தக்காளி விலை உயர்ந்தது. இடையில் சற்று சரிவு ஏற்பட்டது.சில நாட்களாக,

தக்காளி விலை மீண்டும், 25 ரூபாய் வரை சென்றது. தக்காளிக்கு, தற்போது கட்டுபடியான விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.இவ்வாறு, கூறினார்.**மீன்கள் அதிகரிப்பு மீனவர்கள் திருப்தி**

பழவேற்காடு: கடலில் மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள் வலையில், கீச்சான், கானாங்கெளுத்தி ஆகிய மீன்கள் எதிர்பார்த்த அளவில் கிடைத்து வருகின்றன.

மீன்பிடி தடை காலம் முடிந்து, பழவேற்காடு, கடலில் மீன் பிடிக்க சென்ற மீனவர்கள் வலையில், மத்தி, கவளை உள்ளிட்ட மீன்களே குறைந்த அளவில் கிடைத்தன. இதனால் மீனவர்கள்
விரக்தியில் இருந்து வந்தனர். இந்நிலையில் கடந்த இரு தினங்களாக, மீனவர்களின் வலையில், கீச்சான், கானாங்கெளுத்தி, சூறை உள்ளிட்ட மீன்கள் எதிர்பார்த்த அளவில் கிடைத்து வருகின்றன. கரை திரும்பும் மீனவர்கள் பழவேற்காடு ஏரிக்கரையில் உள்ள மீன் இறங்கு தளத்தில் வைத்து, அவற்றை ஏல முறையில் விற்பனை செய்கின்றனர். மீன்களின் ரகம் மற்றும் அளவை பொறுத்து, விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. மொத்த வியாபாரிகள் அவற்றை வாங்கி,
உடனுக்குடன் ஐஸ் பெட்டிகளில் அடைத்து, கேரளா, கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு அனுப்புகின்றனர்.கடலில் மீன் கிடைக்காமல் விரக்தியில் இருந்த மீனவர்கள், தற்போது நிம்மதி அடைந்து உள்ளனர். இது குறித்து, மீனவர் ஒருவர் கூறுகையில், 'கடலில் மீன் வளம் குறைந்து வருகிறது; இதேபோன்று தொடர்ந்து மீன்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது' என்றார்.

**பூச்சி தாக்குதலால் சவுக்கு மரங்கள் பாதிப்பு விவசாயிகள் கவலை**

உத்திரமேரூர்: அருங்குன்றத்தில் பயிரிட்டுள்ள சவுக்கு மரங்கள், பூச்சி தாக்குதலால், பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

உத்திரமேரூர் ஒன்றியம், சிறுதாமூர் ஊராட்சிக்கு உட்பட்டது, அருங்குன்றம் கிராமம். இக்கிராமத்தில், ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி அருகே, 8 ஏக்கர் பரப்பளவில், சவுக்கு மரக் கன்றுகள் நட்டு, அப்பகுதி விவசாயிகள் பராமரித்து வருகின்றனர். இந்நிலையில், சில நாட்களாக, சவுக்கு மரங்கள் பூச்சி தாக்குதலுக்கு உள்ளாகி, இலைகளின்றி மரங்கள் காய்ந்து வருகின்றன. இதனால், சவுக்கு பயிர் செய்த விவசாயிகள், நஷ்டம் ஏற்படுமோ என, கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து, இப்பகுதி விவசாயிகள் கூறுகையில், 'இரண்டு ஆண்டுகளுக்கு முன், நடவு செய்த இந்த சவுக்கு மரக்கன்றுகள், தற்போது 10 அடி உயரம் வளர்ந்துள்ளன. இரண்டு மாதங்களாக, சவுக்கு மரங்களில், கம்பளி பூச்சிகள் அடர்த்தியாக இருந்ததை காண முடிந்தது. அதன் பிறகு இலைகள் உதிர்ந்து மரங்கள் காய்ந்தன. தற்போது பூச்சிகள் குறைந்திருந்தாலும், ஒரு சில மரங்கள் மட்டுமே செழுமையாக உள்ளன. அந்த மரங்களும் கருகி விடுமோ என, அச்சத்தில் உள்ளோம்' என்றனர்.

**தென்னை நார்கழிவு கம்போஸ்ட் உரம் தயாரிக்க வேளாண் அதிகாரி அறிவுரை**

பட்டுக்கோட்டை: தஞ்சை மாவட்ட சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்ட அறிக்கை: கம்போஸ்ட் உரம் தயாரிக்க, 100 கிலோ தென்னை நார்க்கழிவு, ஒரு டன் புளூரோட்டஸ், ஒரு கிலோ காளான்வித்து, ஐந்து கிலோ யூரியா வேண்டும். முதலில் தென்னை நார்க் கழிவை, 5, 3 மீட்டர் நீள அகலமுடைய மேடான நிலப்பரப்பில் சமமாக பரப்ப வேண்டும். அதன்

மேல், 200 கிராம் புளூரோட்டஸ் காளான் வித்துகளை சீராக பரப்பி, அதன் மேல் தண்ணீர் தெளிக்க வேண்டும். தொடர்ந்து, 100 கிலோ தென்னை நார்க்கழிவை பரப்பி, ஒரு கிலோ யூரியாவை சீராக தூவ வேண்டும். மீண்டும் அதன் மேல் நன்கு தண்ணீர் தெளிக்க வேண்டும்.இதே போல நார்கழிவு, புளூரோட்டஸ், காளான் வித்து மற்றும் யூரியா ஆகியவற்றை, 10 அடுக்குகள் வரும் வரை (ஒரு மீட்டர் உயரம்) மாற்றி மாற்றி அடுக்கி, ஈரம் காயாதவாறு தினமும் தண்ணீர் தெளித்து வர வேண்டும். மூப்பது நாட்களுக்கு பின், இந்த கழிவானது கருப்பு நிறத்தில் மாறும். இதுவே, கம்போஸ்ட் உரமாக பயிர்களுக்கு பயன் படுத்தக்கூடிய மிகச்சரியான தருணம்.இந்த உரத்தினால், தென்னை நார்கழிவில் உள்ள நார்ப் பொருட்கள் சிதைக்கப்பட்டு, எளிதில் பயிருக்கு கிடைக்கும் சத்தாக மாறுகிறது. கரிமம், நைட்ரஜன் ஆகியவற்றின் விகிதாச்சாரம், 112:1 லிருந்து 21:1 என்ற அளவுக்கு குறைக்கப்படுகிறது. இதனால், நைட்ரஜன் சத்து என்ற வீணாவது குறைந்து, பயிருக்கு பெருமளவில் கிடைக்கிறது, தழைச்சத்தின் அளவு, 0.26 சதத்திலிருந்து, 1.06 சதமாக அதிகரிக்கிறது.மக்கிய கம்போஸ்டில் நுண் சத்துக்கள், முதன்மைச்சத்துக்கள் மற்றும் இரண்டாம் நிலை சத்துக்கள் அளவு அதிகமாக இருக்கும். இந்த கம்போஸ்ட் உரமானது மானாவாரி நிலங்களும், களர், உவர் நிலங்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மண்ணின் பௌதீக மற்றும் வேதியல் தன்மைகளை பாதுகாக்கிறது, இந்த உரம், நிலத்துக்கு சத்துக்களை அளிப்பதுடன் மண்ணின் நீர் பிடிப்புத் திறனை அதிகரிக்கச் செய்கிறது. ஒரு ஏக்கருக்கு சாதாரணமாக, ஐந்து டன் தொழு உரம் இடும் இடத்தில், கம்போஸ்ட் உரத்தை, இரண்டு டன் இட்டாலே தொழு உரத்திற்கு இணையான மகசூலும், விளைபொருட்களின் தரமும், மண்ணின் வளமும் பாதுகாக்கப்படுவதுடன் சுற்றுச்சூழல் கேடும் தவிர்க்கப்படுகிறது.சேதுபாவாசத்திரம், பேராவூரணி வட்டாரங்களில் சாலை ஓரங்களில் குவியலாக கிடக்கும் தென்னை நார் கழிவுகளை மக்கச் செய்து, கம்போஸ்ட் உரமாக விவசாயிகள் பயன்படுத்தலாம்.

**வனநிலங்களில் சாகுபடி:வனத்துறை அறிவுறுத்தல்**

வருஷநாடு:வனச்சரணாலயமாக அறிவிக்கப்பட்ட காமராஜபுரம், கொடிக்குளம்குடிசை, இந்திராநகர் வனப்பகுதிகளில் விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டாம் என வனத்துறையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.கடமலை-மயிலை ஒன்றியம், தும்மக்குண்டு ஊராட்சிக்கு உட்பட்ட காமராஜபுரம், கொடிக்குளம்குடிசை, இந்திரா நகர், உரக்குண்டான்கேனி உட்பட 10 க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில் இரண்டாயிரம் ஏக்கர் பரப்பளவில் இலவம் மரம், கொட்டை முந்திரி, தக்காளி, கத்தரி உட்பட பல்வேறு பயிர்களை சாகுபடி செய்கின்றனர். இந்த நிலங்கள் வனத்துறையினர் கட்டுப்பாட்டில் உள்ளதால், தோட்டத்தில் உள்ள கிணறு மற்றும் மின் வசதியினை காலி செய்யுமாறு வனத்துறையினர் விவசாயிகளுக்கு அறிவுறுத்தி வருகின்றனர். வனநிலங்களில் சாகுபடி செய்ய வேண்டாம் எனவும் விவசாயிகளை வனத்துறையினர் வலியுறுத்தி வருகின்றனர். வனச்சரணலாயத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களை வெளியேற்ற வனத்துறை நடவடிக்கை எடுத்து வருவதால் விவசாய சாகுபடியை தவிர்க்க வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

**காய்கறி, பழ சாகுபடி மானியம் பெறவிவசாயிகள் தேர்வுக்கு சிறப்பு முகாம்**

சிவகங்கை:""தோட்டக்கலை துறை மானிய திட்டத்தில் பயன் பெற பயனாளிகள் தேர்வு மற்றும் விண்ணப்பம் பெற ஜூலை 2ம் தேதி சிறப்பு முகாம் நடைபெறும்,'' என சிவகங்கை தோட்டக்கலை துணை இயக்குனர் கல்யாணசுந்தரம் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: தோட்டக்கலைத்துறை மூலம் நடப்பாண்டு தேசிய தோட்டக்கலை இயக்கம், நுண்நீர்பாசன, மானாவாரி பகுதி அபிவிருத்தி, அம்மா பண்ணை மகளிர் குழு, பெருநகர சுற்றுப்புற காய்கறி அபிவிருத்தி திட்டங்கள் உட்பட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்த உள்ளது. இதில், மா, கொய்யா, பப்பாளி, எலுமிச்சை, முந்திரி, கத்திரி, வெண்டை,

தக்காளி, மிளகாய் போன்ற வீரிய ஒட்டு காய்கறி பயிர்கள், மல்லிகை, சம்பங்கி பயிரிட மானியம் வழங்கப்படுகிறது.

இதற்காக நிழற்வலைக்கூடம், பசுமை குடில், பறவைதடுப்பு வலை, நிலப்போர்வை அமைக்கவும், டிராக்டர், பவர்டில்லர் ஆகிய பண்ணை இயந்திரங்கள் வாங்க மானியம் வழங்கப்படும்.

அனைத்து பயிர் சாகுபடிக்கும் சொட்டு நீர் பாசன கருவி அமைக்க சிறு, குறு விவசாயிக்கு 100 சதவீதம்,இதர விவசாயிக்கு 75 சதவீத மானியம் வழங்கப்படும். மானாவாரி திட்டத்தில் மா சாகுபடி மற்றும் ஊடு பயிராக வெண்டை சாகுபடி, மண் புழு உர தயாரிப்பு கூடம் அமைக்க மானியம் தரப்படும்.

அம்மா பண்ணை மகளிர் குழுக்கள், பெருநகர காய்கறி அபிவிருத்தி திட்டத்தில் தேர்வு செய்யப்படும் பகுதியில் காய்கறி சாகுபடிக்கு மானியம் வழங்கப்படும்.

இதில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் ஜூலை 2ம் தேதி வட்டார அளவில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் பங்கேற்று மானிய விபரம், பயனாளிகளுக்கு தகுதி, வழங்க வேண்டிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும், என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**நாட்டுக் கோழி வளர்ப்புக்கு மானியம்**

பெரியகுளம், உத்தமபாளையம் வட்டாரங்களில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நாட்டுக் கறிக்கோழி வளர்ப்புக்கு மானியம் வழங்கப்பட உள்ளது.இது குறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பு:பெரியகுளம், உத்தமபாளையம் ஆகிய வட்டாரங்களுக்கு உள்பட்ட 8 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், நாட்டுக் கறிக் கோழி வளர்ப்பில் ஈடுபடும் 160 பேருக்கு கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நபார்டு வங்கி மூலம் மானியம் மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்பட

உள்ளது.நாட்டுக் கறிக் கோழி வளர்ப்பில் ஈடுபடுபவர்களுக்கு வங்கிக் கடன் மற்றும் பயிற்சி அளிக்கப்படும். இது குறித்த விவரங்களை சம்மந்தப்பட்ட பகுதிகளில் உள்ள கால்நடை மருந்தகங்களில் கால்நடை உதவி மருத்துவர்களை தொடர்பு கொண்டு தெரிந்து கொண்டு, மானிய உதவி பெற விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**சிவ கங்கை மாவட் டத் தில் தோட் டக் க லைத் துறை சார் பில் நாளை சிறப்பு முகாம்**

சிவ கங்கை மாவட் டத் தில் தோட் டக் க லைத் துறை மூலம் செயல் ப டுத் தப் ப டும் மானி யத் திட் டங் க ளுக்கு, பய னா ளி கள் தேர்வு செய் யப் பட உள் ள னர். இதற்கு விண் ணப் பங் கள் பெறு வ தற் காக, அனைத்து வட் டா ரங் க ளி லும் வியா ழக் கி ழமை (ஜூலை 2) சிறப்பு முகாம் கள் நடத் தப் பட உள் ள தாக, மாவட் டத் தோட் டக் கலை துணை இயக் கு நர் பெ. கல் யா ண சுந் த ரம் தெரி வித் துள் ளார்.

அவர் மேலும் கூறி யது: சிவ கங்கை மாவட் டத் தில் இந்த ஆண்டு (2015-2016) தோட் டக் க லைத் துறை மூலம் பல் வேறு மானி யத் திட் டங் கள் செயல் ப டுத் தப் பட்டு வரு கின் றன. இவற் றில், தேசிய தோட் டக் கலை இயக் கத் திட் டம், நுண் நீர்ப் பா ச னத் திட் டம், மானா வாரி பகுதி அபி வி ருத் தித் திட் டம், அம்மா பண்ணை மக ளிர் குழுத் திட் டம், பெரு ந கர சுற் றுப் புற காய் கறி அபி வி ருத் தித் திட் டம் போன்ற திட் டங் கள் அடங் கும்.

தேசிய தோட் டக் க லைத் திட் டத் தின் கீழ், மா, கொய்யா, பப் பாளி, எலு மிச்சை, முந் திரி ஆகிய பழப் பயிர் கள், கத் திரி, வெண்டை, தக் காளி, மிள காய் போன்ற வீரிய ஒட்டு காய் கறி பயிர் கள், மல் லிகை, சம் பங்கி போன்ற மலர்ப் பயிர் கள் சாகு படி செய்ய விவ சா யி க ளுக்கு மானி யம் வழங் கப் ப டு கி றது. மேலும், நிழல் வ லைக் கூ டம், பசு மைக் கு டில், பற வைத் தடுப் பு வலை ஆகி யவை அமைக் க வும், உழவு வாக னம் (டிராக் டர், பவர் டில் லர்) ஆகிய பண்ணை இயந் தி ரங் கள் வாங் க வும் மானி யம் வழங் கப் ப டு கி றது.

நுண் நீர்ப் பா ச னத் திட் டத் தின் கீழ், அனைத் துப் பயிர் கள் சாகு ப டிக் கும் சொட்டு நீர்ப் பா ச னக் கரு வி கள் அமைக்க சிறு, குறு விவ சா யி க ளுக்கு 100 சத வீ தம் மானி ய மும், இதர விவ சா யி க ளுக்கு 75 சத வீ தம் மானி ய மும் வழங் கப் ப டு கி றது.மானா வாரி பகுதி அபி வி ருத் தித் திட் டத் தின் கீழ், மா சாகு படி மற் றும் ஊடு பயி ர ரான வெண்டை சாகு ப டிக் கும், மண் புழு உரத் தயா ரிப் புக் கூடம் அமைக் க வும் மானி யம் வழங் கப் ப டு கி றது.மேலும், அம்மா பண்ணை மக ளிர் குழுக் க ளுக் கும், பெரு ந கர சுற் றுப் புற காய் கறி அபி வி ருத் தித் திட் டத் தின் கீழ் தேர்ந் தெ டுக் கப் பட்ட வட் டா ரங் க ளில் காய் கறி சாகு படி மற் றும் விற் ப னைக் கும் தேவை யான மானி யங் கள் வழங் கப் ப டு கின் றன.

இத் திட் டங் க ளில் பய ன டைய விரும் பும் விவ சா யி கள் தங் க ளது வட் டா ரத் தில், வியா ழக் கி ழமை நடை பெற உள்ள சிறப்பு முகாம் க ளில் கலந் து கொண்டு, மானிய விவ ரம், பய னா ளி க ளுக் கான தகுதி மற் றும் சமர்ப் பிக் கப் பட வேண் டிய ஆவ ணங் கள் குறித்த விவ ரங் களை அறிந்து, விண் ணப் பங் களை அளிக் க லாம் என் றார்.

**உசிலம்பட்டி பகுதியில் நாளை விவசாயிகளுக்கான விழிப்புணர்வு விழா**

உசிலம்பட்டி வட்டாரம், செல்லம்பட்டி ஒன்றியப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை சார்பில் திட்ட விழிப்புணர்வு விழா ஜுலை 2ஆம் தேதி நடைபெறவுள்ளது.

உசிலம்பட்டி உழவர்சந்தை அருகிலுள்ள வட்டார தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலகம், செல்லம்பட்டி யூனியன் அலுவலக வளாகத்திலுள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு தோட்டக் கலை துறை திட்டங்கள் மானிய விபரம் குறித்த விழிப்புணர்வு விழா ஜுலை 2ஆம் தேதி நடைபெற இருக்கிறது. இவ்விழாவில், 2015-2016 ஆண்டுக்கான திட்டத்தில் விண்ணப்பதாரராக சேர விருப்பம் உள்ள விவசாயிகள் தங்களது நில சிட்டா, அடங்கல், நில வரைபடம்,குடும்ப அட்டை நகல், சிறு குறு விவசாயி சான்று மற்றும் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ 4 போன்ற ஆவணங்களுடன் அலுவலகம் வந்து பதிவு செய்து கொள்ள வேண்டும் மானியத்தில் மா ஒட்டு

கன்றுகள், பப்பாளி மற்றும் மல்லிகை செடிகள் நடவு செய்ய வாய்ப்புள்ளது. எனவே இந்த அரிய வாய்ப்பை உசிலம்பட்டி வட்டார விவசாயிகள் மற்றும் செல்லம்பட்டி ஒன்றியத்திலுள்ள விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு உசிலம்பட்டி தோட்டக் கலை உதவி இயக்குநர் தி.கார்த்திகேயன் மற்றும் செல்லம்பட்டி தோட்டக் கலை உதவி இயக்குநர் எம்.பாண்டி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

**முட்டை விலை**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.60, சென்னையில் ரூ.3.70.

கறிக்கோழி விலைபல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக்குழு திங்கள்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.85, முட்டைக்கோழி கிலோ ரூ.65.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**சின் ன வெங்காயம் விளைச்சல் அமோகம் விவசாயிகள் மகிழ்ச்சி**



சத்திரப்பட்டி,

சத்திரப்பட்டி பகுதிகளில் சின்னவெங்காயம் விளைச்சல் அமோகமாக இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சின்னவெங்காயம்

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தாலுகா சத்திரப்பட்டி, விருப்பாட்சி, தாசரிபட்டி, புதுக்கோட்டை, சாமியார்புதூர் மற்றும் விரலப்பட்டி பிரிவு ஆகிய பகுதிகளில் அதிக அளவில் ஒட்டு வெங்காயம் நடவு செய்யப்பட்டு தற்போது அறுவடை நடந்து வருகிறது. விளைச்சல் அதிகமாக இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இந்த பகுதிகளில் அறுவடை செய்யப்படும் சின்னவெங்காயம் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் இருந்து தமிழகம் மற்றும் கேரளா வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டு கப்பல் மற்றும் விமானம் மூலமாக துபாய், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

விலை உயர்வு

ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் கடந்த வாரம் 10 கிலோ வெங்காயம் ரூ.200 முதல் ரூ.400 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது ரூ.400 முதல் ரூ.600 வரை மொத்த வியாபாரிகளால் விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் இந்த வெங்காயம் கடைகளில் சில்லரை விலையில் 10 கிலோ ரூ.650–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதேபோன்று கர்நாடக மாநிலம் மைசூரில் இருந்து சின்னவெங்காயம் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டுக்கு கொள்முதல் செய்யப்படுகிறது.

மைசூர் சின்னவெங்காயம் 10 கிலோ ரூ.500–க்கும் மொத்த வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. அதிக விளைச்சல் மற்றும் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தாலும் விலை உயர்வு காரணமாக இல்லத்தரசிகள் கவலை அடைந்துள்ளனர். கோரிக்கை: எனவே சின்னவெங்காயம் விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பருவ மழை குறைந்துள்ளதால் கபினி, கே.ஆர்.எஸ். அணைகளுக்கு நீர்வரத்து குறைந்தது**



மைசூரு,

பருவ மழை குறைந்துள்ளதால் கபினி, கே.ஆர்.எஸ். அணைகளுக்கு நீர்வரத்து குறைந்துள்ளது.

<u>பருவ மழை குறைந்தது</u>

கேரள மாநிலம் வயநாடு உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாக பருவ மழை பெய்தது. இதனால் கபினி அணைக்கு நீர்வரத்து அதிகமானது. இதனால் அணை நிரம்பியது.

ஆனால் தற்போது வயநாடு பகுதியில் பருவ மழை குறைந்துள்ளதால் கபினி அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. அணைக்கு நேற்றைய நிலவரப்படி வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் வந்தது. கடல் மட்டத்தில் இருந்து 2,284.8 அடி உயரம் கொண்ட கபினி அணையின் நீர்மட்டம் 2,282 அடியாக உள்ளது.

<u>கே.ஆர்.எஸ். அணை</u>

அதேபோல் குடகு மாவட்டத்தில் மழை குறைந்துள்ளதால் கே.ஆர்.எஸ். அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. கே.ஆர்.எஸ். அணையின் உயரம் 124.8 அடி ஆகும். தற்போது அணையில் 106.4 அடி உயரத்துக்கு தண்ணீர் நிரம்பி உள்ளது. நேற்றைய நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 21 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் வந்தது. வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

குடகு மாவட்டத்தில் மழை மீண்டும் கொட்டி தீர்த்தால் கே.ஆர்.எஸ். அணை தனது முழு கொள்ளளவை எட்டும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**நாகர்கோவில் சந்தையில் வாழைக்குலைகள் விலை உயர்வு**



நாகர்கோவில் சந்தையில் வாழைக்குலைகள் விலை உயர்ந்து நேற்று அதிக விலைக்கு ஏலம் போனது.

<u>கடந்த வாரத்தைவிட அதிகம்</u>

நாகர்கோவில் ஒழுகினசேரியில் உள்ள அப்டா மார்க்கெட்டில் வாரம்தோறும் திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய 4 நாட்கள் வாழைக்காய் சந்தை கூடுகிறது. குமரி மாவட்டம் மட்டுமின்றி நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து லாரிகளில் இங்கு வாழைக்குலைகள் கொண்டு வரப்படுகின்றன.

கடந்த வாரம் இந்த சந்தையில் வாழைக்குலைகளின் விலை குறைவாக

இருந்தது. ஆனால் நேற்று விலையில் ஏற்றம் காணப்பட்டது. இதற்கு வாழைக்குலைகளின் வரத்து குறைவே காரணம் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். மேலும் “திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில்தான் கேரள வியாபாரிகள் அதிகம் வருவார்கள். அதனால் அந்த நாட்களில் வாழைக்குலைகளின் வரத்தும் அதிகரிக்கும்“ என்றும் அவர்கள் கூறினர்.

அதிக விலைக்கு ஏலம்

இதன்படி கேரள வியாபாரிகள் நேற்று அதிகம் வராததால் வாழைக்குலைகளின் வரத்து குறைவாக இருந்தது. இதனால் ஏலம் எடுப்பதில் உள்ளூர் வியாபாரிகளுக்கிடையே போட்டி நிலவியது. குறைந்த இருப்பு காரணமாக வாழைக்குலைகள் நேற்று அதிக விலைக்கு ஏலம் போயின. வாழைக்குலைகளின் நேற்றைய விலை விவரம் குறித்து சங்க துணைத்தலைவர் நடராஜன் கூறியதாவது:–

நல்ல விளைச்சல் மிகுந்த 100 காய்கள் கொண்ட செவ்வாழைக்குலை கடந்த வாரம் ரூ.500–க்கு ஏலம் போனது. ஆனால் இன்று (அதாவது நேற்று) 600 ரூபாய்க்கு ஏலம் போனது. தரமான 40 காய்களைக் கொண்ட ஏத்தன்குலை ரூ.400 வரை விற்றது. ஏத்தன்குலைக்கு கடந்தவாரமும் இதேவிலைதான். 125 வரை காய்கள் கொண்ட வெள்ளை தொழுவன்குலை 300 ரூபாய்க்கு ஏலம்போனது. 150 வரை காய்கள் கொண்ட ரசக்கதலி குலை, 140 வரை காய்கள் கொண்ட பச்சை வாழைக்குலை மற்றும் 150 வரை காய்கள் கொண்ட மட்டி வாழைக்குலை ஆகியவையும் தலா ரூ.300–க்கு விற்றன.

வாழை இலை

நாட்டு வாழைக்குலை 250 ரூபாய்வரை ஏலம் போனது. எல்லா வாழைக்குலைகளும் அதிக விலைக்கு ஏலம் போயின. மேலும் வாழை இலைக்கும் அதிக விலை கிடைத்தது. நல்ல தரமான 150 வாழை இலைகளின் விலை ரூ.200 ஆகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**பந்தலூர் பகுதியில் ஈரப்பழா விளைச்சல் அதிகரிப்பு**



பந்தலூர் தாலுகா கொளப்பள்ளி, மழவன்சேரம்பாடி, அய்யங்கொல்லி உள்பட பல்வேறு பகுதிகளில் சிறு விவசாயிகள், பொதுமக்கள் பல்வேறு பயிர்களை நடவு செய்து பராமரித்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக சமையலுக்கு பெரிதும் பயன்படுத்தப்படும் ஈரப்பழா மரங்களை அனைத்து தரப்பினரும் வளர்த்து வருகின்றனர். ஆண்டுதோறும் ஜூன் மாதம் விளையும் ஈரப்பழா கிலோவுக்கு ரூ.40 வரை விலை கிடைத்து வருகிறது.இந்த நிலையில் தற்போது ஈரப்பழா காய்கள் அதிகளவு விளைந்து அறுவடைக்கு தயாராக உள்ளன. மேலும் மார்க்கெட்டுக்கு ஈரப்பழா வரத்தும் அதிகரித்து உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**போடி பகுதியில் வெற்றிலை கொடியில் அழுகல் நோய் விவசாயிகள் கவலை**



போடி,

போடி பகுதியில் வெற்றிலை கொடியில் அழுகல் நோய் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>வெற்றிலை விவசாயம்</u>

தேனி மாவட்டத்தில் போடி, மீனாட்சிபுரம், வடுகபட்டி, பெரியகுளம், சின்னமனூர், சங்கராபுரம், விசுவாசபுரம் உள்ளிட்ட பகுதிகளில் வெற்றிலை விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் ஈடுபட்டு வருகிறார்கள். வெற்றிலை பயிருக்கு இதமான வெப்பமும், பரவலாக மழையும் போதுமானதாகும்.

சுபகாரியங்கள் உள்பட பல்வேறு விஷேச நிகழ்ச்சிகளுக்கும், உணவு செரிமானம் ஆவதற்கும் வெற்றிலையை பயன்படுத்தி வருகிறார்கள்.

<u>அழுகல் நோய்</u>

இவ்வாறு சிறப்பு பெற்ற வெற்றிலை கொடிக்கால் போடி அருகே உள்ள மீனாட்சிபுரம், விசுவாசபுரம் பகுதியில் மழையின் காரணமாக அழுகல் நோய், வாடல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பல லட்ச ரூபாய் இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

ஒரு ஏக்கர் நிலத்தை ரூ.40 ஆயிரத்துக்கு குத்தகைக்கு எடுத்து ரூ.50 ஆயிரம் வரை செலவு செய்த நிலையில் தொடர்ந்து 3 ஆண்டுகள் வரை வெற்றிலையை பறிக்க முடியும். இதனால் ஆண்டுக்கு ரூ.1 லட்சம் வரை வருமானம் கிடைக்கும். ஆனால் தற்போது வெற்றிலை கொடி நட்டு நல்ல வளர்ந்துள்ள நிலையில் தற்போது பெய்த சாரல் மழையின் காரணமாக வாடல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தினகரன்

## ரூ.15க்கு விற்றது ரூ.60 ஆனது, சின்ன வெங்காயம் விலை கிடுகிடு




மதுரை: சின்ன வெங்காயத்தின் விலை தொடர் ந்து அதிகரித்து வருகிறது. மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் கிலோ ரூ.60 என விற்பனையாகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மதுரை மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் சில்லரை விலையில் கிலோ ரூ.15 என விற்பனையானது. பின்னர் படிப்படியாக விலை உயர்ந்து, தற்போது கிலோ ரூ.60 என விற்பனையாகிறது. சென்ட்ரல் காய்கறி மார்க்கெட் வியாபாரிகள் கூறுகையில், "இலங்கை உட்பட வெளிநாடுகளுக்கு சின்ன வெங்காயம் அதிகமாக ஏற்றுமதியாகிறது. இதனால் உள்ளூர் மார்க்கெட்டுக்கு வெங்காயம் வரத்து குறைந்து வருகிறது. ஏற்றுமதி தொடர்ந்தால் வெங்காயம் விலை இன்னும் விலை உயர வாய்ப்பு உள்ளது,'' என்றார்.

## பயிர்களில் மகசூல் பெற ஆட்டு எரு அவசியம் வேளாண் அறிவியல் மையம் தகவல்

பழநி, : பயிர்களில் அதிக மகசூல் பெற, ஆட்டு எருவை உரமாக பயன்படுத்துமாறு வேளாண் அறிவியல் மையம் ஆலோசனை அளித்துள்ளது.ரசாயன உரங்களின் விலை ஆண்டு தோறும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. தமிழக விவசாயிகள் பூச்சிக்கொல்லி

மருந்துகள் மற்றும் ரசாயன உரங்களை அதிகம் பயன்படுத்துவதாக அண்டை மாநிலங்கள் தற்போது குற்றம் சாட்ட துவங்கியுள்ளன. வறட்சி, தண்ணீர் பற்றாக்குறை, ரசாயன உரங்களில் கலப்படம், அளவுக்கு அதிகமான பூச்சி மருந்து தெளித்தல், இயற்கை அழிவு என பல்வேறு பிரச்னைகளை சந்தித்து வரும் விவசாயிகளுக்கு விளைபொருள் உற்பத்தி பெரும் சவாலாக உள்ளது.இதை சமாளிப்பதற்காக தற்போது விவசாயிகள் இயற்கை உரத்திற்கு மாறி வருகின்றனர். தமிழகத்தில் 20 ஆண்டுகளுக்கு முன்னர் அனைத்து விவசாயிகளிடமும் போதுமான அளவிற்கு கால்நடைகள் இருந்தன. அவற்றின் எருக்கள் உரமாக பயன்படுத்தப்பட்டன. தற்போது அதே நிலையை மீண்டும் கடைபிடிக்குமாறு வேளாண் அறிவியல் மையத்தினர் ஆலோசனை அளிக்கத் துவங்கியுள்ளனர்.ஆட்டின் சிறுநீரில் தழைச்சத்தின் அளவு அதிகமாக இருக்கும். ஆட்டு எருவில் இருந்து ஆழ்கூள முறையில் உரம் உற்பத்தி செய்யலாம். நிலக்கடலை தோல், துண்டிக்கப்பட்ட வைக்கோல், இலைச் சருகுகள், மரத்தூள், தேங்காய்நார் போன்றவற்றை பயன்படுத்தி ஆழ் கூளம் எளிதாக தயாரிக்கலாம். ஆடு ஒன்றிற்கு 7 கிலோ என்ற அளவில் ஆழ்கூளத்தை தரையில் பரப்ப வேண்டும். இதனால் ஆடுகளில் இருந்து வெளியேறும் புழுக்கை மற்றும் சிறுநீர் ஆழ்கூளத்துடன் கலந்து விடும். சிறுநீர் ஆழ்கூளத்தால் உறிஞ்சப்படுவதால் அதில் உள்ள தழைச்சத்து ஆவியாகி விரையமாவது குறையும்.ஆழ்கூளத்தில் உள்ள ஈரத்தன்மையை பொறுத்து 3 லிருந்து 4 மாதத்திற்கு ஒருமுறை பயன்படுத்தலாம். இந்த முறையில் 10 ஆடுகளில் இருந்து ஆண்டுக்கு இரண்டரை டன் தரமான எரு கிடைக்கும். இந்த எருவில் 50 கிலோ பொட்டாஷ் உரத்திலுள்ள சாம்பல் சத்து கிடைக்கும். இம்முறையில் தயார்செய்யப்படும் எருக்களில் களையில்லாமல் இருக்கும். இதனால் பயிர் சாகுபடியில் களை எடுக்கும் செலவு குறையும். இவ்உரத்தை நெல், தக்காளி, மிளகாய் மற்றும் கத்திரி பயிர்களுக்கு பயன்படுத்தி அதிக லாபத்தினை பெறலாம்,’ என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு போலி ஊட்ட சத்து மருந்து ரூ.10 லட்சம் வெங்காய பயிர்கள் நாசம்**

தாராபுரம், : தாராபுரம், குண்டடம், கோவிந்தாபுரம், உண்டாரபட்டி உள்ளிட்ட பகுதிகளில் அன்மையில் பெய்த மழையின் காரணமாக சின்ன வெங்காயம் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டினர்.உண்டாரபட்டி, வேலம்பட்டி பகுதி விவசாயிகள் பெரியசாமி, குப்புசாமி, குமராத்தாள் ஆகியோர் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 60ஆயிரம் செலவு செய்து, விதை வெங்காயத்தை நடவு செய்தனர். 60 நாட்களில் அறுவடைக்கு தயாராகும் இந்த வெங்காய பயிர்களின் வளர்ச்சியை பாதிக்கும் வகையில், உயர்ந்து வளர்ந்த புற்களை அகற்ற முடிவு செய்த விவசாயிகள் உரம் பூச்சிமருந்து விற்பனை கடைக்கு சென்று, அவர்கள் கூறிய ஆலோசனைப்படி களைக்கொள்ளி மருந்தையும், பயிருக்கு ஊக்கம் தரும் எனக்கூறி வழங்கியுள்ளனர். மேலும் இந்த கடைக்காரர்கள் அளித்த ஊட்ட சத்து டானிக்கையும் வெங்காய பயிருக்கு அடித்தனர். மருந்து அடித்த 4 நாட்களில் வெங்காய பயிர்கள் கருக துவங்கின. இதனால் அதிர்ச்சியடைந்த விவசாயிகள், மருந்து கடைக்காரரிடம் காரணம் கேட்டபோது அடுத்த 10 நாட்களில் பயிர்கள் நன்கு வளரும் என கூறியுள்ளார். ஆனால் எதிர்பார்த்தபடி காய்பிடித்து வளர வேண்டிய பயிர்கள் முற்றிலுமாக கருகிப்போனது. அடுத்த 15 நாட்களில் அறுவடைக்கு தயாராக வேண்டிய வெங்காயம் வேரிலேயே வளர்ச்சியின்றி சூம்பி விட்டதாகவும், தரம் குறைந்த மருந்தை, டானிக் எனக்கூறி மருந்து கடைக்காரர்கள் விவசாயிகளிடம் விற்பனை செய்தது இப்போது தெரியவந்துள்ளது. இதனால் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3லட்சம் வீதம் விவசாயிகளுக்கு ரூ. 10லட்சத்திற்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பூச்சி மருந்து கடைகளில் உடனே ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடு பெற்றுத்தர வேண்டும் என தாராபுரம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மஞ்சள் விலை குறைந்ததால் விவசாயிகள் ஏமாற்றம்**

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று முன்தினம் மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி ரகம் 50 குவின்டாலும், கிழங்கு ரகம் 17 குவின்டாலும் விற்பனைக்கு வந்தது. இதை தொண்டாமுத்தூர், இருட்டுப்பள்ளத்தை சேர்ந்த விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். இவை அனைத்தும் விற்பனையானது.இதை கோவை, பொள்ளாச்சி, ஈரோடு பகுதியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். விரலி மஞ்சள் குவின்டால் ரூ.6,499 முதல் ரூ.6,799 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.6,700. விற்பனை மதிப்பு ரூ.3.35 லட்சம். கிழங்கு மஞ்சள் குவின்டால் ரூ.6,551 முதல் ரூ.6,851 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.6,600. விற்பனை மதிப்பு ரூ.1.12 லட்சம். இரண்டு ரகமும் சேர்ந்து ரூ.4.47 லட்சத்திற்கு விற்றது. இது கடந்த ஏலத்தை காட்டிலும் ரூ.10 ஆயிரம் குறைவாகும். கடந்த ஏலத்தை காட்டிலும் விரலி மஞ்சள் விலை குவின்டாலுக்கு ரூ.150ம், கிழங்கு மஞ்சள் விலை குவின்டாலுக்கு ரூ.200ம் குறைந்துள்ளது. கடந்த 2 வாரமாக மஞ்சள் வரத்து பாதியாக குறைந்துள்ளது. விலையும் குறைந்துள்ளது. வரத்து குறைந்தால் விலை உயரும் என்று விவசாயிகள் எதிர்பார்த்தனர். ஆனால், விலை உயராததால் ஏமாற்றம் அடைந்தனர்.

**தென்மேற்கு பருவமழை சிறுவாணி நீர்மட்டம் 9 மீட்டர் உயர்வு**

கோவை, : தென்மேற்கு பருவமழையின் காரணமாக சிறுவாணி அணையின் நீர்மட்டம் 9 மீட்டர் உயர்ந்து 874.35மீ என்ற அளவை எட்டியுள்ளது. மேற்குதொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள சிறுவாணி அணையின் நீர் தேக்க அளவு 15மீட்டர். அதாவது கடல் மட்ட உயரம் கணக்கின்படி 878.50மீட்டர். இப்பகுதியில் கடந்த 19ம் தேதி முதல் தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்து வந்தது. அணையின் அடிவாரம் மற்றும் மீன்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்தது.

இந்த பருவமழையினால் அணையின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்தது. கடந்த 11 நாட்களில் சிறுவாணி அணைப்பகுதியில் 700 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இதனால், அணையின் நீர்மட்டம் 9 மீட்டர் வரை உயர்ந்து 874.35மீ என்ற அளவை எட்டியுள்ளது. நேற்று அணைப்பகுதியில் மழை பெய்யவில்லை. அணையில் இருந்து 91.50 எம்எல்டி தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது. மீண்டும் கனமழை தொடர்ந்து பெய்தால் அணை நிரம்ப வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.